செ.வெ.எண்: 19 நாள்: 09.11.2017

# பத்திரிக்கை செய்தி

## அனைவருக்கும் வீடுகள்கட்டும் திட்டம்

## நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்திலுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் (ஓவேலி பேரூராட்சி தவிர) 2015–16 மற்றும் 2016–17ம் ஆண்டுகளில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு குடிசை மற்றும் மண் வீடுகளை சூரிய மின்னாற்றலுடன் கூடிய கான்கிரீட் வீடுகளாக மாற்றுவதற்கு வீடு ஒன்றுக்கு ரூ.2.10 இலட்சம் வீதம் **அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ்** பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணிகள் நடைப்பெற்று வருகிறது.

அரசாணை (நிலை) எண் 75, வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாடு (SC.1(1)) துறை, நாள் 24.05.2015–ல் வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் வழிகாட்டுதலின்படி இத்திட்டத்தின் மூலம் பயனடைய கீழ்கண்ட அடிப்படை தகுதிகள் இருக்க வேண்டும்.

1) சம்பந்தப்பட்ட நபர் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினராக இருக்க வேண்டும்.
2) தனது பெயரோ அல்லது தன் குடும்ப உறுப்பினரது பெயரோ கொண்ட சொந்தமான பட்டா நிலத்தில் மண் சுவருடன் கூடிய (கான்கிரீட் கூரை அல்லாத) புல் கூரை / தகரம் /ஆஸ்பெஸ்டாஸ் அல்லது மண் ஓடு கூரை உள்ள வீடு அல்லது முழுமையாக புற்களால் மேயப்பட்ட கூரை வீட்டினை கொண்டிருக்க வேண்டும்.
3) பேரூராட்சியிலோ, நகராட்சியிலோ அல்லது வேறு எங்கும் இவருக்கு சொந்தமான வீடுகள் இருக்கக் கூடாது. அரசு மூலம் வழங்கப்பட்ட எந்தவொரு சலுகையிலும் வீடு கட்டியிருக்கக் கூடாது.

இத்திட்டத்தின் கீழ் 300 சதுர அடிக்கு குறையாமல் வீடுகள் அமைத்து கொடுக்க கீழ்கண்டவாறு குடிசைகள் / வீடுகள் தேர்வு செய்யப்படுகிறது.

1) குடிசை வீடுகள் (Fully Thatched [both enclosure and roof])
2) மண் சுவர் மற்றும் புல் கூரைகள் (Mud wall with thatched roof)
3) மண் சுவர் மற்றும் தகரம்/ஆஸ்பெஸ்டாஸ் கூரைகள் (Mud wall with GI / AC roof)
4) மண் சுவர் மற்றும் ஓடு கூரைகள் (Mud wall with tiled roof)

மேற்படி நேர்வில் உடல் ஊனமுற்றோர் / மனவளர்ச்சி குன்றியோர், விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், பெண்களை தலைவராகக் கொண்ட குடும்பங்கள், மாற்று பாலினத்தார் மற்றும் ஆதிவாசி / பழங்குடியினருக்கு முன்னுரிமையும் வழங்கப்படுகிறது.

அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் மூலமாக மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதால், நகராட்சி மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தகுதி வாய்ந்த நபர்கள் சம்பந்தப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகத்தை நேரடியாக அணுகி இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்படி திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிதருவதாக கூறும் இடைத்தரகர்கள் என தெரிவிக்கும் எவரிடமும் பணமோ அல்லது ஆவணங்களோ கொடுத்து ஏமாற வேண்டாம் எனவும், இடைத்தரகர்களாக செயல்படுவது கண்டறியப்பட்டால், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கு **9943126000** என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம் எனவும் பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.